1970 மார்ச் 18]

THIRU T. MARTIN : In the list placed before this House only in a few instances, an amount exceeding Rs. 200 has been entrusted with decoy witnesses and in other cases only a nominal lower sum had been entrusted with decoy witnesses. May I request the Hon. Minister to state whether Government would come forward to state whether all the high-class brothels are abolished in the City?

(No answer)

State Labour Advisory Board

*448 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the State Labour Advisory Board met about 11th June 1969; and

(b) if so, the details of the recommendations made by it?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : (அ) ஆம். மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியக் கூட்டம் 1969-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 10, 24-ஆம் நாட்களில் நடைபெற்றது.

(இ) இவ்வாரியத்தில் பரிவுரை விவரங்கள் அடங்கிய விவர அறிக்கை* ஒன்று சட்டப் பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : தலைவர் அவர்களே, தொழிலாளர்கள், பிராவிடென்ட் நிதியிலிருந்து கடன் வாங்கும் வசதியும் மற்ற நன்மைகளும் கிடைக்கும் வகையில், தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கக்கூடிய வகையில் இந்தச் சட்டங்கள் அமையுமாறு அட்வைசரி போர்டு கவனித்து, தொழிலாளர்களுக்குப் பயன்படும்படிச் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, குறிப்பிட்ட பரிசீலனைக் கூட்டத்தில்கூட அதுபற்றி ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மாண்புமிகு உறுப்பினருக்குத் தனியாக ஏதேனும் கருத்து இருந்தால், அதை எழுதியனுப்பினால் அது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

DR. H. V. HANDE : In the statement placed on the table, one of the important recommendations considered by the Board was the "Report of the Special Committee on cost of living index". Is it not a fact that the cost of living has been rising up very high during the last two months and because of that the report for February due normally to be released in the first week of March has not been released till now by the Directorate of Statistics? If so, may I know the reasons why the cost of living index for February has not been released till now?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இது தொழிலாளர் ஆலோசனை வாரியத்தைப்பற்றிய விவரம் அடங்கிய அறிக்கை. தொழிலாளர் ஆலோசனை வாரியத்தைப்பற்றி கேள்வி கேட்டதற்கு இந்த விவர அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. கனம் உறுப்பினர் அவர்கள் காஸ்ட் ஆஃப் லிவ்விங் இன்டெக்ஸ் பற்றித் தனியாகக் கேள்விக் கேட்டால் பதில் அளிக்கப்படும்.

---

*338–352-ம் பக்கங்களில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது

திரு. எம். பூபதி: ஆன் எ பாயின்ட் ஆஃப் க்ளாரிபிகேஷன் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆஃப் க்ளாரிபிகேஷன் என்று இல்லை. பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று இருந்தால் சொல்லுங்கள்.

திரு. எம். பூபதி: தலைவர் அவர்களே, அங்கத்தினர்கள் எவ்வளவு நேரம் வரைக்கும் தங்கள் கையை உயர்த்திக்கொண்டேயிருந்தால் பேரவைத் தலைவரின் கவனத்தை ஈர்க்க முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை).

இந்திய அரசுக்கு திருப்பித்தரவேண்டிய கடன்கள்

*436 வினா.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய அரசுக்குச் சேர வேண்டிய நடப்பு ஆண்டு கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குக் கால அளவினை மாற்ற மாநில அரசு கோரியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்கு இந்திய அரசு தந்துள்ள பதில் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மத்திய அரசுக்குச் சேர வேண்டிய இம் மாநிலக் கடன் தவணைத் தொகைகளை மாற்றியமைக்கும்படி மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தியுள்ளது.

(இ) மத்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

THIRU K. VINAYAKAM: Sir, will the Hon. Minister be pleased to state for the benefit of this House, the exact amount which we owe to the Centre under various categories also, when the loan was taken and when the grant was made; also, what is the total amount of interest that we have to pay them, also what exactly is the appeal made by the State Government to the Centre in regard to this matter and what exactly is the reply they have received from the Centre?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எத்தனை கேள்வி போடுவது?

திரு. கே. விநயகம்: நாலே நான்கு கேள்விகள் தான்! (சிரிப்பு)

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மாண்புமிகு உறுப்பினர் ஒரு பெரிய அறிக்கையே வைப்பதற்கான கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். சபாநாயகர் அனுமதித்தால் முழு விவரமும் சொல்லலாம். பொதுவாகச் சொல்ல வேண்டுமானால் 31—1—1969 முடிய 340 கோடி கடன் நாம் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இன்னும் அது குட்டிபோட்டால் இந்த 31-ம் தேதி முடிய 344 கோடிக்கு வரலாம்.

இந்த ஆண்டிலே 37 கோடி ரூபாய் நாம் அவர்களுக்குத் திருப்பித் தர வேண்டியதாக இருக்கிறது. பெறுகிற தொகை 36 கோடி ரூபாய்தான். இதற்காகத்தான் நாம் நிதிக் கமிஷனிடத்திலும், நவம்பர் மாதத்தில் பிரதமர் வந்திருந்தபோது அவர்களிடத்திலும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. இன்னும் நம்முடைய கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.